செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

**பயிலரங்கம் - 3**

## தமிழ்ச் செவ்விலக்கியங்களில் மகளிரின் பன்முக ஆளுமை

**Multifaceted Personality of Women in Tamil Classical Literature**

(07.05.2024 - 13.05.2024)

இலக்கியமும் வரலாறும் சமூகத்தின் வளர்ச்சியை உணர்ந்து கொள்ள உதவும் மிகச் சிறந்த ஆவணங்கள். இவ்இரண்டின் ஊடாகப் பயணிக்கின்றபொழுது ஒவ்வொரு காலத்திற்குமேற்ப நாகரிகம், பண்பாடு, பொருளாதாரம், மக்களின் வாழ்வியல் எனப் பல நிலைகளில் சமூகப் போக்கின் வளர்நிலை மாற்றங்களை உணர இயலும். அந்த வகையில் நோக்கும்போது மக்களின் வாழ்வியலில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் மகளிரின் நிலை இன்றும் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவே கருதப்பெறுகின்றது. பெண் ஆணுக்கு இணையாகக் கருதப்பெறாமல் அவளது வாழ்வில் இரண்டாம் நிலையிலேயே இருப்பதாகக் கூறப்பெறுகின்றது.

தொன்றுதொட்டுத் தாய்வழிச் சமூகமாக விளங்கிய உலகில் ‘பெண்’ தெய்வமாக வணங்கப்பட்டாள். சந்ததி வளர்க்கும் சக்தி என்பதால் பெண்ணுக்குச் சமுதாயத்தில் பெருமதிப்பு இருந்து வந்தது. தந்தைவழிச் சமூக அமைப்பிற்குப் பின்னர் புனிதமாகக் கருதப்பெற்ற பெண், முதல் இடத்திலிருந்து இரண்டாம் இடத்திற்கும் காலப்போக்கில் விளிம்பு நிலைக்கும் தள்ளப் பெற்றதாகப் பேசப்பெறுகின்றது. ஆனால் தொன்மை காலத்தில் ‘பெண்ணின் பெருந்தக்க யாவுள’ என மகளிரை வியந்து போற்றும் பாங்கினைக் காணமுடிகின்றது.

உலகின் மிகச் சிறந்த நாகரிகமுடையதாகக் கருதப்பெறும் பண்டைய கிரேக்கத்தில் பெண் – மனைவி, தாய் என்ற நிலையில் பெரிதும் மதிக்கப்பெற்றாள். அல்டேகர், கோசாம்பி, குர்யே, ராதா குமுத்முகர்ஜி போன்ற சமூக, வரலாற்றறிஞர்கள் இந்தியாவில் வேதகாலத்தில் மகளிரின் நிலை மேன்மையுற்றிருந்தது எனக் குறிப்பிடுகின்றனர்.

பண்டைத் தமிழகத்தில் பெண்கள் தனித்துவத்தோடு வாழ்ந்திருந்தமையைத் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் சிறப்பாகப் பதிவு செய்திருக்கின்றன. பெண்ணுரிமை பேணப்பட்ட அக்காலத்தில் பெண்ணடிமைத்தனம் தோன்றியிருக்கவில்லை. சமூகத்தில் பெண் சிசுக்கொலை, பெண்கல்வி மறுப்பு, குடும்பத்தில் பெண் எதிர்கொள்ளும் சிக்கல்கள், இரட்டைப் பணிச்சுமை, சமமான ஊதியமின்மை, சமூகத்தில் எதிர்கொள்ளும் பாலியல் சிக்கல்கள், பெண்ணைச் சந்தைப் பொருளாக்கிப் பார்க்கும் வாணிகப் போக்கு ஆகிய சிக்கல்கள் இல்லாத மகளிருக்கான பொற்காலமாகப் பழந்தமிழ்ச் சமூகம் விளங்கியமையைச்

சங்க இலக்கியம் தொடங்கி காப்பியக் காலம் வரை தோன்றிய தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களின் பதிவுகள் வெளிப்படுத்துகின்றன.

பெண் குழந்தைப் பிறப்பு மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகக் கருதப்பெற்றதைச் சங்க இலக்கியங்கள் உறுதி செய்கின்றன. 'மயக்குறை மக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே' எனும் புறநானூற்றுப் பதிவு ஆண்பெண் பேதமில்லாமல் குழந்தைகள் போற்றப்பெற்ற தன்மையினையும், குழந்தைப்பேறு வாழ்வின் செல்வமாகக் கருதப்பெற்ற பான்மையினையும் உணர்த்திச் செல்கின்றது. பெண் குழந்தைப் பிறப்பு மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகப் போற்றப்பெற்றதை,

குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனள் பெற்ற எல்வளைக் குறுமகள் (257:1-2)

எனும் ஐங்குறுநூற்றின் பாடலடிகள் பதிவுச்செய்திருக்கின்றன. பெண் குழந்தை செல்வச் செழிப்போடு தாய் தந்தை இருவராலும் அன்போடு புரக்கப்பெற்றதை,

யானும் தாயும் மடுப்ப தேனொடு
தம்பால் உண்ணாள் வீங்குவனள் விம்மி (179:5-6)
பால்பெய் வள்ளம் சால்கை பற்றி …
… உண்என்று ஊட்டி
பிறந்தற் கொண்டு சிறந்தவை செய்துயான்
நலம்புனைந்து எடுத்தஎன் பொலந்தொடி குறுமகள் (219:5-9)

என நற்றிணையும் அகநானூறும் முறையே பதிவு செய்துள்ளன.

பண்டைச் சமூகத்தில் கல்வி சிறந்திருந்தமையினையும், குறிப்பாகப் பெண்கல்வி சிறந்திருந்த பான்மையினையும் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் சுட்டிச் சென்றுள்ளன. சங்க கால இலக்கியங்களில் நாற்பத்தோரு பெண் ஆளுமைகள் தம் கவிதைகளை வழங்கியிருக்கின்றனர். ஔவையார், வெள்ளிவீதியார், காக்கைப்பாடினி நச்செள்ளையார், ஆதிமந்தி, காவற்பெண்டு, நக்கண்ணையார், வெறிபாடிய காமக்கண்ணியார், ஒக்கூர் மாசாத்தியார், தாயங்கண்ணியார் எனப் பட்டியல் நீண்டு செல்கின்றது. மிகப்பெரிய போரினை நடவாது தம் கூர்த்த அறிவுத்திறத்தால் தவிர்த்த ஔவையின் செயற்கரும் செயல் சங்கப் புலவர்களின் சான்றாண்மைக்குச் சான்று. சங்க அகப்புற இலக்கியங்களில் விரவிக் கிடக்கும் அவர்களின் பாடல்களைப் பயில்கையில் அவர்களின் உலகியலறிவும், கல்விச் சிறப்பும், அரசியல், வரலாறு, தொழில், சோதிடம், தத்துவம், சமூக உணர்வு எனப் பல்துறை அறிவின் உச்சமும் அறிய முடிகின்றது.

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் மகளிர் சுதந்திரமாக வாழ்ந்திருந்தனர். தற்காலச் சமூகத்தில் பாலின வேறுபாடின்றி வயதொத்த குழந்தைகள் விளையாடி மகிழ்வதைப் போலவே, அக்காலமும் குழந்தைகள் விளையாடி மகிழ இடமளித்தது. இருபாலினரும் விளையாடி மகிழ்ந்த செய்தியினைக் குறுந்தொகை,

இவன்இவள் ஐம்பால் பற்றவும் இவள்இவன்
புன்தலை ஓரி வாங்குநள் பரியவும்
காதல் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது (229:1-4)

எனப் பதிவு செய்திருக்கின்றது.

சங்க கால மகளிர் தம் தோழியரோடும் ஆடவரோடும், சிறுவரோடும் இல்லில் வளர்த்த வளர்ப்பு உயிரிகளோடும் தம் உள்ள இயல்பிற்கேற்ப விளையாட்டுகளை விளையாடி உள்ளனர். குரவை, வள்ளை, துணங்கை, சிற்றில், ஊசல், தாயம், பந்தாடல், புனலாடல், மலர்க் கொய்தல், பாவையாடல் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தனர். மகளிர் சுதந்திரமாக வாழ்ந்தமைக்குத் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் சான்று.

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் மகளிர், நானிலத்து ஐந்திணைக்கேற்ப தொழிலை மேற்கொண்டிருந்தனர். தினைப்புனம் காத்தல், தயிர் மோர் விற்றல், பூ விற்றல், நாற்று நடுதல், களை பறித்தல், அறுவடை செய்த நெல்லைக் களத்தில் சேர்த்தல், மீன்பிடித்தல், விற்றல், உணக்கல், புள் ஓம்பல், கள் விற்றல், பண்ணியம் விற்றல், ஆடை வெளுத்தல், உப்பு விற்றல் என மகளிர் சிறுதொழில் புரிந்ததைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்திருக்கின்றன.

சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து காப்பிய இலக்கிய வகைமைகள் பெண்ணிற்குப் பெருமை சேர்த்தன. முதற்காப்பியமான சிலப்பதிகாரம் பெண்ணைக் காப்பியத் தலைவியாக்கி மிக உயரிய மூன்று சிந்தனைகளை மையமிட்டு அவளது வாழ்வியலைப் படைத்துத் தெய்வநிலைக்கு உயர்த்திக் காட்டியிருக்கின்றது.

இதன் நீட்சியாக இயற்றப்பெற்ற மணிமேகலை காப்பியமும் பௌத்த சமயத்தை முன்னெடுக்கும் புதுமையாளாகக் காப்பியத் தலைவி மணிமேகலையைப் படைத்திருக்கின்றது. இவ்வகையில் தொல் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் மகளிரின் வாழ்வியல், பொருளாதாரம், கல்வி, சமூகத் தகுதி, பங்களிப்பு எனப் பலநிலைகளில் தரவுகளைப் பதிவு செய்திருக்கின்றன. அப்பதிவுகளின் வழி மகளிரின் கல்வி, சிந்தனை, ஆளுமை, பல்துறை அறிவு ஆகியவற்றினை உணர்ந்து கொள்ளவும், அப்பதிவுகளை மீளாய்வு செய்வதற்கு ஏதுவாகவும் ஆய்வு மாணவியர், பேராசிரியைகளுக்கும் எனத் தனித்துவமான இப்பயிலரங்கினை 07.05.2024 முதல் 13.05.2024 வரை நடத்த மொழிகள் பள்ளி & மொழிக் கல்வியியல் மற்றும் மொழித் தொழில்நுட்பப் புலம் திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கில் ஆய்வனுபம் மிக்க பேராசிரியப் பெருமக்கள் கலந்துகொண்டு பயிற்றுரை வழங்க இருக்கின்றனர். இப்பயிலரங்கில் கலந்து கொண்டு பயனுற செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கின்றது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 25.
- இப்பயிலரங்கில் கலந்து கொள்ள மகளிரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 07.05.2024 முதல் 13.05.2024 முடிய ஏழு நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 01.00 & மாலை 02.00 - 05.00.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் இணைய வழி விண்ணப்பத்தை நிறைவு செய்து இணையத்தின்வழி அனுப்பவும்.
- இணையவழி விண்ணப்பம் https://forms.gle/JgWqoE9B4HmwSd21A என்ற இணைப்பின் வழியாக அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR -code) மூலமாகக் கிடைக்கப்பெறும்.

- பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
- நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **28.04.2024**. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **29.04.2024**அன்று மின்னஞ்சல்/ புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.